[1973 நவம்பர் 23

Improvements for Polivakkam Chitheri

* 340 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to improve "Polivakkam Chitheri" in Tiruvallore taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ரூ. 78,000 மதிப்பீட்டில் குளத்தின் கரையை சீர்படுத்தி மதகு கலிங்கல் ஆகியவைகள் கட்டுவதற்கும் ஆழப் பகுதியில் அலைகல் கட்டுவதற்குமான ஓர் திட்டம் பாசனத் தலைமைப் பொறியாளரால் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருடன் கலந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : போளிவாக்கம் சித்தேரியை மேம்படுத்தும் திட்டத்திற்கு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்ட ஒப்புதல் தந்துவிட்டார்கள். பொறியாளருடன் கூட ஒப்புதல் தந்துவிட்டார்கள். ரெவின்யூ போர்ட் அதற்கான நிதி உதவியைத் தருவார்களா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நிதி ஒதுக்குவது ரெவின்யூ போர்ட் அல்ல. அவர்கள் சிபார்சு செய்த பிறகுதான் அரசு நிதி ஒதுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலிக்கும்.

காரையார்-திருவனந்தபுரம் இணைப்புப் பாதை.

* 341 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி பாபநாசம் மலைப் பகுதி காரையார் செல்லும் ரோட்டின் மார்க்கமாகத் திருவனந்தபுரம் பகுதிக்குப் புதிதாக ரோடு அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) காரையாறிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தின் மாநில எல்லைவரை ரூ. 52.50 லட்சம் அளவில் ஒரு புதிய சாலே அமைக்கும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொருளாதார பல மாநில முக்கிய சாலே திட்டத்தின்கீழ் எடுத்து கொள்ளவேண்டுமென மத்திய அரசிற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : நீண்ட நெடுங்காலமாக இந்தப் பாதையை அமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலேப் பகுதியில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற வாசஸ்தலங்கள் அமைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இதையும் பரிசீலனே செய்யுமா? மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி அந்தப் பாதையை அமைப்பதற்கு நம் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பாதையைப் பற்றிய கேள்வி. முக்கிய சாலே திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள வேண்டுமென மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் வேலே தொடங்கிவிடலாம்.

Loans to Taxi Drivers' Co-operdtive Societies

* 342 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of loan sanctioned to each of the Taxi Drivers' Co-operative Societies till 30th June 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது நபர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அரசாங்க பங்கு மூலதனமாகக் கொடுத்து வருகிறது. ஒவ்வொரு சொஸைட்டிக்கும். அது மிகக் குறைவாக இருக்கிறது. அதனுல் டாக்சி ட்ரைவர்கள் ரூ 2,500 அவர்கள் பங்குக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலேயில் அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே,

@140-142-ம் பக்கங்களில் இணேப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.